கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

துளிர் – 3
இதழ் – 8

# துளிர்

ஏப்ரல்–2018

விளம்பி ஆண்டு
சித்திரை மாதம்

## தெனாலி ராமன் கதைகள் - அதிசயக்குதிரை

கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரிகளில் ஒருவர் ஒரு யோசனை சொன்னார். அதன்படி ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டு வந்தது. அத்தொகையைப் பெற்றுக்கொண்டு குதிரைக்கு நன்கு ஊட்டமளித்து வளர்த்தனர். அதே போல் தெனாலிராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது. ஆனால் தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய துவாரம் வைத்திருந்தான். அந்த துவாரத்தின் வழியாக புல்லை நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகச் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக நோஞ்சானாக இருந்தது.

குதிரைக்குத் தீனி வாங்கிப் போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான். ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி குதிரைகளை அரண்மனைக்கு வரவழைத்தார் மன்னர். அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டன. மன்னர் குதிரைகளைப் பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து "உன் குதிரையை ஏன் கொண்டு வரவில்லை" என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிராமனோ, "என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால் தான் இங்கே கொண்டு வரவில்லை" என்றான். "குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்தனுப்புகிறேன்" என்றான். இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனை தெனாலிராமனுடன் அனுப்பினார்.

குதிரைப்படைத்தலைவருக்கு நீண்ட தாடியுண்டு. குதிரைப் படைத்தலைவரும் அந்த துவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்கமாட்டாத குதிரைப் படைத்தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத்தான் இருக்கும் என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.

அங்கு குதிரையின் வாயில் குதிரைப்படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பிரிக்கச் செய்தார். அங்கே குதிரை எலும்பும், தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தெனாலிராமன், "இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத்தலைவரின் தாடியை கவ்விக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி அதோகதிதான் ஆகி இருக்கும் " என்றான்.
இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்தும் விட்டார்.

*-ரம்யா நவனீத்*

## கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு

1. *நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை , அதே விலையில் smile.amazon.com இணையதளம் மூலம் பெறுங்கள்.*

2. *நீங்கள் செலவு செய்த தொகையில் ஒரு சிறு பகுதி , அமேசான் (Amazon) நிறுவனத்தால் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.*

3. *"DFW tamil foundation" என்று smile.amazon.com இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ்ப் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.*

amazon.com Smile
You shop. Amazon gives.

## நிகழ்வறிவோம்



25 மார்ச் , 2018 அன்று நமது பள்ளிக்கு தகுதி அங்கீகாரம் வழங்குவதற்கான ஆய்வு நடைபெற்றது. ஆய்வுக்குழுவினர் பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்துரையாடி பள்ளியின் செயல்முறைகளை அறிந்து கொண்டனர். வகுப்பறைகளுக்குச் சென்று எவ்வாறு குழந்தைகள் தமிழைக் கற்றுக்கொள்கிறார்கள் என்பதையும் குறிப்பெடுத்தனர். கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆய்வில், முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் நடத்தப் பெறுகின்ற நம் பள்ளியின் நோக்கத்தையும் சிறப்பான செயல்முறைகளை கடைபிடிக்கும் திறன்களையும் ஆய்வுக்குழுவினர் மிகவும் பாராட்டினர். நமது பள்ளியின் தனிச்சிறப்பான இடைநிலை வகுப்பு அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. இந்த ஆய்விற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக தயார் செய்த ஆசிரியர் குழுவினருக்கும், மிகவும் ஒத்துழைத்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்தின் நன்றிகள். தகுதி அங்கீகார ஆய்வு முடிவுகள் இந்த கல்வியாண்டின் இறுதியில் எதிர்பார்க்கப் படுகின்றன.

சாஸ்தா தமிழ் அறக்கட்டளை இந்த ஆண்டு  நடத்திய தமிழ்த் திறன் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை கோப்பல் தமிழ்க் கல்வி மையத்தின் மாணவர்கள் பெற்றனர்.  முதல் நிலை மாணவி கேயா திருக்குறள், ஆத்திச்சூடி மற்றும் பேச்சுப் போட்டிகளிலும், ஏழாம் நிலை மாணவர் ரூப்பேஷ் திருக்குறள் போட்டியிலும் பரிசுகளை வென்றார்கள். இவர்களுடன் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களையும் கூறிய நம் பள்ளியின் ஏழாம் நிலை ஆசிரியரான திரு. செந்தில் துரைசாமி பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப் பட்டார். பங்கு பெற்ற அனைவருக்கும் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்தின் வாழ்த்துகள்.









## மாணவர் பக்கம்




*நிலை 4- மாணவர்கள்*




## குறள் சொல்லும் பொருள்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

| | |
|---|---|
| மழித்தலும் | - தலையை மொட்டையடித்துக் கொண்டோ |
| நீட்டலும் | - தாடி , சடாமுடி வளர்த்துக்கொண்டோ |
| வேண்டா | - ஆகிய வேடம் துறவிக்கு தேவையில்லை |
| உலகம் பழித்தது | - ஒழுக்கம் இல்லாத செயல்களை |
| ஒழித்து விடின் | - நீக்கி விடவேண்டும் |

துறவி என்பவர் தலையை மொட்டையடித்துக் கொண்டோ தாடி மற்றும் சடாமுடி வளர்த்துக்கொண்டோ வேடம்போடுபவராக இருக்கக்கூடாது. உலகம் விரும்பாத ஒழுக்கம் இல்லாத செயல்களை நீக்கியவராக இருக்க வேண்டும்.

*அருண்*

## காலத்தை வென்றவர் – எலோன் மஸ்க் (Elon Musk)

*நவீன அறிவியலின் எல்லைகளைத் தாண்டி புதிய பொருட்களை உருவாக்குவதை தன் வாழ்வின் இலக்காகக் கொண்டவர் திரு. எலோன் மஸ்க் .*

*தன் பன்னிரண்டாவது வயதில் பிளாஸ்டர் என்ற புதிய வீடியோ விளையாட்டுச் செயலியை (Blaster Video Game App) உருவாக்கி ஐந்நூறு டாலருக்கு விற்றார். கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு Zip2 என்ற இணையச் செய்தித் தளத்தை உருவாக்கினார். நான்காண்டுகளில் அதன் மதிப்பு 307 மில்லியன் டாலராக உயர்ந்தது.*



*பின், எக்ஸ்.காம் (X.COM) என்ற மின்னணு பணபரிமாற்ற செயலியை உருவாக்கினார். இதுவே பின்னர் எல்லோரும் இன்று பயன்படுத்தும் பேபால் (PAYPAL) நிறுவனமாக உயர்ந்துள்ளது.*

*2001 ஆம் ஆண்டு ஸ்பேஸ் எக்ஸ் (Space X) என்ற செயற்கைக்கோள் அனுப்பும் முதல் தனியார் நிறுவனத்தைத் தொடங்கினார். விண்கலன் தொழில்நுட்பத்தில் இந்நிறுவனம் மாபெரும் புரட்சிகளை செய்து வருகிறது. குறைந்த விலையில் அதிக எடையுள்ள பொருட்களை விண்வெளிக்கு எடுத்துச்செல்லும் பல விண்கலன்களை வெற்றிகரமாகச்செய்து முடித்துள்ளது.*

*2004 ஆம் ஆண்டு டெஸ்லா என்ற மின் ஊர்தி (Electric Car) தயாரிக்கும் நிறுவனத்தை வாங்கினார். 2008 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியில் டெஸ்லா தவித்தபோது அதன் தலைமை வாகன வடிவமைப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின் டெஸ்லா தயாரித்த மின் ஊந்துகள் அனைத்தும் மாபெரும் வெற்றி பெற்றன. இன்றும் உலகின் முன்னணி வாகன நிறுவனங்கள் அனைத்தும் டெஸ்லாவின் மின் இயந்திரத்தை மாதிரியாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றன.*

*சோலார் சிட்டி என்ற எரிசக்தி சேவை நிறுவனத்தைத் தொடங்கி வீடுகளின் கூரைகளில், சூரிய சக்தியில் மின்சாரம் தயாரிக்கும் ஓடுகளை உருவாக்கினார். நகரங்களுக்கு இடையிலான போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஹைப்பர்லூப் திட்டப்பணியைத் தொடங்கினார். மனித மூளையில் செயற்கை அறிவைச் செலுத்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகிறார்.*

*அருண்*

## Vocabulary– சொல்லகராதி

| | |
|---|---|
| *Doctrine* | சித்தாந்தம் |
| *Efficiency* | செயல்திறன் |
| *Equator* | நிலநடுக்கோடு |
| *Fast food* | விரைவு உணவு |
| *Fiber glass* | கண்ணாடி இழை |

## ஹ.. ஹ.. ஹா....

மூச்சு விட்டால் உயிர் போய்விடும் பலூனுக்கு

*-ஸ்ரீநி*

*நீர் ஆகாரம்'*
*உடலுக்கு நல்லது.*
*'நீர் ஆதாரம்'*
*உழவுக்கு நல்லது*

*-ஸ்ரீநி*

## தமிழ் பழமொழி

எடுப்பார் மழுவை, தடுப்பார் புலியை, கொடுப்பார் அருமை..

**பொருள்**: அருஞ்செயல் ஆற்றுபவர்கள் உண்டு ஆனால் ஈகைக் குணமுடையோரைக் காணுதல் அரிது..

மழு என்பது பழுக்கக் காய்ச்சிய இரும்பு. அதையும் கையால் பிடிப்பவர் உண்டு; புலியைத் தடுப்பார் உண்டு, ஆனால் எல்லோருக்கும் செயலில் எளிதாக உள்ள ஈகைக் குணம் மட்டும் காண்பது முன்சொன்ன அருஞ்செயல் ஆற்றுபவர்களை விட அரிதாக உள்ளது என்பது செய்தி..


*-சங்கீதா*




***Volunteer registration link:***
https://goo.gl/forms/bmKbVWje5oRHGI5Q2

இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள் !

## பத்து வித்தியாசங்களைக்



## எண்களை வரிசையில் இணைக்கவும்



## விடுகதை

1. அறுக்க உதவாத கருக்கரிவாள் எது?
2. கறுப்புப் பாறையில் வெள்ளைப் பிறை.

விடை அடுத்த இதழில்...

***சென்ற இதழ் விடைகள்:***

1. உள்ளங்கை
2. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு.

*-சங்கீதா*

## கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

***பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புக்களை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை newsletter@coppelltamil.com என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.***

## கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

***இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;***
***கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00—7:00PM***
***www.coppelltamil.com email: connect@coppelltamil.com***

*https://www.facebook.com/CoppellTamil/?view_public_for=1019360444741468 http://coppelltamil.com/calendar.htm*